73—

விட்டுமனைப் பட்டா

*6979 **திரு. கோ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சேலம் வட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி, தளவாய்ப்பட்டி, செட்டிசாவடி ஆகிய கிராமங்களிலுள்ள ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் வட்டத்தைச் சேர்ந்த தளவாய்ப்பட்டி மற்றும் செட்டிசாவடி கிராமங்கள் சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 8 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளன. இப்பகுதி நிலத்தின் சந்தை மதிப்பு மிக அதிகமாகவுள்ளது. இருப்பினும், வீட்டுமனைப் பட்டா இல்லாத அனைத்து ஆதி திராவிட மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்ற ஆதி திராவிட மக்களின் விடிவெள்ளியாகத் திகழும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய கொள்கையினை பின்பற்றும்விதமாக நிதிநிலைமை மற்றும் அப்பகுதியில் வாழும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் தேவையைக் கருத்திற்கொண்டும் நில எடுப்புச் சட்ட விதிகளுக்குட்பட்டும் நில எடுப்பு செய்து மனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், கொண்டப்பநாயக்கன்பட்டி கிராமம் கனிம வளங்கள் நிறைந்த பகுதியாக உள்ளதாலும், சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என்பதாலும், மாற்று இடம் கண்டறியப்பட்டு அப்பகுதிவாழ் ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 பிப்ரவரி 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.

திரு. கோ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் போற்றும் உன்னதத் தலைவியே! மனித சக்தியைக் கடந்த மகா சக்தியே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் தவப் புதல்வியே! நாளைய பாரதத்தின் நம்பிக்கை நட்சத்திரமே! அமைதி, வளம், வளர்ச்சி என்ற தாரக மந்திரங்களுடனும், நாடாளுமன்றத் தேர்தலை சந்தித்து நாடாளப்போகும் ஏழரை கோடி தமிழக மக்களின் ஒளிவிளக்கே! (மேசையைத் தட்டும் ஒலி) நாளைய பாரதத்தை வழிநடத்தப்போகும் 110 கோடி இந்திய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமே! தினந்தோறும் நாங்கள் வணங்கும் குலதெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்குகிறேன். சேலம் மேற்கு தொகுதிக்குட்பட்ட கொண்டப்பநாயக்கன்பட்டி, தளவாய்ப்பட்டி, செட்டிசாவடி ஆகிய பகுதிகளில் ஆதி திராவிட மக்கள் 30 ஆண்டுக்காலமாக கரட்டு புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அந்தப் பகுதி மக்களின் தேவைக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் இடங்களில் வீட்டுமனைப் பட்டா இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் இத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மாமன்ற உறுப்பினர் வீட்டுமனைப் பட்டா கோரும் இடத்தில் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமானால், அரசு புறம்போக்கு நிலத்தில் வழங்க வழிவகை இருக்கின்றதா என்று பரிசீலிக்கப்பட்டு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகின்றது. அவ்வாறு ஆட்சேபணையற்ற

புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லையெனில், தனியார் நிலங்களை ஆதி திராவிடர்களுக்காக நில எடுப்பு சட்டம் 31/1978-ன்கீழ் நிலம் கையகப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றது. அதன்படி மாநகராட்சி பகுதி என்றால் 1 சென்ட் நிலம், நகராட்சிப் பகுதியாக இருந்தால் ஒன்றரை சென்ட் நிலம், இதர பகுதிகள் எனில் 3 சென்ட் நிலம் என்ற அளவில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகின்றது. இந்த மனைப் பட்டா வழங்குவதற்கு, கிராமப் பகுதியாக இருந்தால் தனி நபர் ஆண்டு வருமானம் ரூ.40,000 என்றும், நகரப் பகுதியாக இருந்தால் ரூ.60,000 என்றும் இருக்கவேண்டும். அதன்படி தனியார் எவரேனும் பேச்சுவார்த்தைமூலம் வழிகாட்டி மதிப்பீட்டிற்கு ஒன்றரை மடங்குக்கு மிகாமல் இடம் வழங்க முன்வருவாரேயானால், நிலத்தை உடனடியாக கையகப்படுத்தி வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.

திரு. கோ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொண்டப்பநாயக்கன்பட்டி, தளவாய்ப்பட்டி, செட்டிசாவடி ஆகிய பகுதிகளில் நீண்ட காலமாக ஆதி திராவிடர்கள் மற்றும் பல சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் குடியிருந்து வருகின்றார்கள். அந்தப் பகுதி கரட்டுப் புறம்போக்கு என்பதால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டாவது பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இடத்தை ஆய்வு செய்து, இதனை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாமன்ற உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.